**இராணிப்பேட்டை நகராட்சி**

**2020 ஆம் ஆண்டு மே மாதம் – 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.05.2020 | **பொருள் எண்.136**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2020 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | **நகர்மன்றத் தீர்மான எண். 136**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 29.05.2020 | **பொருள் எண்.137**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண். 137**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 29.05.2020 | **பொருள் எண்.138**<br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு K.Dis No. 30813/J3/2018 நாள் **11.12.2018**–ல் **96** நபர்கள் வெளிமுகவர்கள் மூலம் நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் | **நகர்மன்றத் தீர்மான எண்.138**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 96 பணியாளர்களை வெளிமுகவர்கள் (Out Sourcing) மூலம் ஓராண்டு காலத்திற்கு சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரியதின் அடிப்படையில் நகரமன்ற தீர்மானம் எண். 3144 நாள் 08.03.2019 மற்றும் இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.843/2018/எச்1 நாள் 15.06.2019 ஆம் தேதிய உத்தரவில் 01.07.2019 ஆம் தேதி முதல் 30.06.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு 56 பணியாளர்கள் மற்றும் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரிய 96 பணியாளர்களில் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 56 பணியாளர்களுடன் கூடுதலாக 20 பணியாளர்களை சேர்த்து 76 பணியாளர்களாக சப்ளை செய்ய இவ்வலுவலக ந.க.எண்.843/2018/எச்1 நாள் 10.02.2020 ஆம் தேதிய உத்தரவில் கீரின்வாரியர், 14 4–வது தெரு, கே.கே. நகர், மணவாளநகர், திருவள்ளூர் –602002 என்ற நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி பணியாளர்களை சப்ளை செய்வதற்கான பணி உத்தரவு காலம் 30.06.2020 ஆம் தேதியுடன் முடிவடைவதாலும், மேற்படி நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக உள்ளதாலும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே சப்ளை செய்து வரும் கீரின்வாரியர், 14 4–வது தெரு, கே.கே. நகர், மணவாளநகர், திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு 96 நபர்களை சப்ளை செய்ய மேலும் ஓராண்டு காலத்திற்கு பணி உத்தரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மேற்படி 96 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 419/– வீதம் ஓராண்டு காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.160.00 இலட்சம் மட்டும் மன்றம் அனுமதிக்கலாம்.

வேலை உத்திரவு வழங்கப்படும் Out Sourcing Agencies –ன் பணி திருப்திகரமாக இருந்தால் வேலை உத்திரவு முடிந்த தேதியிலிருந்து அடுத்த ஓராண்டு காலத்திற்கு மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை அவர்களால் எதிர்காலத்தில் நிர்ணயம் செய்யப்படும் ஸ்வீப்பர்களுக்கான தினக்கூலி, சீருடைகள், பாதுகாப்பு உபகரணங்கள், நிர்வாக செலவினம், ESI . EPF, Life insurance ஆகியவற்றிற்கான கட்டணங்களையும் சேர்த்து மேற்படி Outsourcing Agencies–க்கு அடுத்த ஓராண்டு காலத்திற்கும் நகரமன்றத்தின் அனுமதி பெற்று செயல்படுவதற்கும் நகரமன்றம் நிர்ணயிக்கும் நிபந்தனைகளை ஏற்றுச் செயல்படுத்துவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 843/2018/எச்1)**

| | | |
|---|---|---|
| 29.05.2020 | <u>பொருள் எண்.139</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆர்.ஆர்.ரோட்டில் உள்ள நகராட்சி திருமண மண்டபத்தினை நகரமன்ற தீர்மானம் எண். 109 நாள் 06.07.2007–ன் அடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.4530/2015/அ3 நாள் 12.07.2007, 02.07.2010 மற்றும் 03.06.2013–ல் திரு.பி.ராஜ்குமார் என்பவருக்கு மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டது. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4530/2015/அ3 நாள் 03.03.2017–ல் நகராட்சி திருமண மண்டபத்திற்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2017 முதல் 31.03.2020 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகையினை ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில், வருவாய் ஆய்வாளரின் குறிப்பு நாள் 26.09.2018 –ல் நகராட்சி திருமண மண்டபத்தினை குத்தகை எடுத்த நடத்திக்கொண்டு வந்த பி.ராஜ்குமார் என்பவர் 03.08.2018 அன்று இறந்துவிட்டார் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.4530/2015அ3 நாள் 26.09.2018–ல் 2017–2018 ஏப்ரல் முதல் 2018–2019 செப்டம்பர் வரை உண்டான வாடகைத் தொகை ரூ.13,53,096/–னை செலுத்துமாறு தெரிக்கப்பட்டது. திருமதி.மண்ணம்மாள் க/பெ. (லேட்) பி.ராஜ்குமார் என்பவரின் உறுதி மொழிப்பத்திரத்தில் நகராட்சி திருமண மண்டபத்தினை தொடர்ந்து நடத்தவும், தற்போது திருமண மண்டபத்தில் வாடகை உயர்வு சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை செலுத்தி விடுகிறேன் என உறுதி அளித்துள்ளதின்பேரில், இவ்வலுவலக இறுதி அறிவிப்பு கடிதம் ந.க.எண்.4530/2015/அ3 நாள் 22.11.2018–ல் திருமண மண்டபத்தின் வாடகை உயர்வு சம்மந்தமாக இந்நாள் வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவில்லையென்றும் அப்படி ஏதேனும் வழக்கு தொடர்ந்திருந்தால் வழக்கு எண் மற்றும் ஆவணம் நகராட்சி வசம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்நாள் வரையில் வழக்கு தொடர்ந்ததற்க்கான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்தும் திருமண மண்டபத்திற்கு வாடகை தொகை ரூ. 15,03,440/–( 01.04.2017 முதல் 31.11.2018 வரை) 50% சதவீதம் ரூ. 7,51,720/–னை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால், தாங்கள் இந்நாள் வரையில் 50 சதவீதத் தொகை செலுத்தாமல் நகராட்சி திருமண மண்டபத்தினை தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தனர். இந்நிலையில் திருமதி. மண்ணம்மாள் க/பெ. (லேட்) பி.ராஜ்குமார் என்பவரின் கடிதம் நாள் 14.05.2020–ல் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகை அதிகமாக உள்ளதினால் வாடகைத் தொகை செலுத்த இயவில்லை என்றும் நகராட்சி திருமண மண்டபத்தினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | **நகர்மன்றத் தீர்மான எண்.139**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) நகராட்சி திருமண மண்டபத்திற்கு 01.04.2017 முதல் 16.05.2020 வரை வாடகைத் தொகை ரூ.25,47,146/– னை செலுத்தாதினால் அன்னார் மீது வழக்கு தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | |
| 29.05.2020 | <u>பொருள் எண்.140</u><br>இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.28 தமிழ்நாடு அரசு குடியிருப்பில் அமைந்துள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியின் நீரேற்று அறைக்கு (பம்பிங் ரூம்) செல்லும் 3 பேஸ் 25 sq.mm 4core அலுமீனியம் கேபிள் பழுதடைந்துள்ளதால் அதனை புதியதாக மாற்றவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.20000 (இருபதாயிரம் மட்டும்)–த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிக் கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.20000 (இருபதாயிரம் மட்டும்) இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1594/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.140**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 29.05.2020 | <u>பொருள் எண்.141</u><br>இராணிப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் புதிய 4' LED விளக்குகள் 60 எண்ணிக்கைகள் வாங்கி பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.30000 (முப்பதாயிரம் மட்டும்) –த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிக் கோரியதற்கும், தொடர் | **நகர்மன்றத் தீர்மான எண்.141**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.30000 (முப்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1593/2020/இ1)** | |
| 29.05.2020 | **<u>பொருள் எண்.142</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான மருதம்பாக்கத்தில் அமைந்துள்ள உரக்கிடங்கில் கோடைக்காலத்தில் வெய்யிலின் தாக்கம் காரணமாக தீப்பற்றுதல் ஏற்படுவவால் தீயினைக் கட்டுப்படுத்தவும், பரவாமல் தடுக்கவும் ஏதுவாக உரக்கிடங்கு முழுவதும் குடிநீர் வசதி (Distribution Pipe Line with Valves) புதியதாக அமைக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,20,000/—க்கும் (இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.2,20,000/—க்கும் (இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1590/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.142<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 29.05.2020 | **<u>பொருள் எண்.143</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிதிளில் மழைக்காலங்களில் குப்பைகளை சேகரித்தல், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்தெடுத்தல் போன்ற பணிகளை பணியாளர்கள் மேற்கொள்ள சிரமமாக உள்ளதால் 1) இராணிப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறம், 2)“D Bross” பூங்கா 3)பெரியார் நகர் 4) ஹரியந்த் லேஅவுட் பூங்கா ஆகிய நான்கு பகுதிகளில் Galvanised Corrgrated Coloured Sheets with Truss உடன் Onsite Compositing Centre (OCC) நான்கு எண்ணிக்கைகள் அமைக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,85,000/— (ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்)—த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **நகர்மன்றத் தீர்மான எண்.143<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.1,85,000/– (ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1571/2020/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.05.2020</td>
<td><u>பொருள் எண்.144</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண். 3–னை திரு.டி.கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு மூன்றாண்டு காலத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது திரு.டி. கோபாலகிருஷ்ணன் என்பவரின் 23.03.2020 ஆம் தேதிய கடிதத்தில் எம்.பி.டி. ரோடு முதல் மாடி கடை எண். 3–னை நடத்த இயலாத காரணத்தினால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) எம்.பி.டி. ரோடு முதல் மாடி கடை எண். 3–னை பொது ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.144<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.</td>
</tr>
<tr>
<td>29.05.2020</td>
<td><u>பொருள் எண்.145</u><br>இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள், டாட்மெட்ரிக் பிரிண்டர்கள், லேசர் பிரிண்டர்கள் மற்றும் இணையதளவழி (NetWork) ஆகியவைகள் மின்தடை ஏற்படும் காலங்களில் தங்குதடையின்றி இயங்குவதற்காக நிறுவப்பட்டிருக்கும் 10 KVA, 5 KVA, மற்றும் 3.5 KVA UPS-கள் பொதுநிதியின் கீழ் ரூ.2,20,000/–மதிப்பீட்டில் 2020-2021 ஆம் ஆண்டு பராமரிப்பு பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 08.05.2020 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>Peak Power Solution ,<br>258, TV Malai Road,<br>Vengalapuram,</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.145<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Tirupattur – 635 653.</td><td></td></tr>
<tr><td>2</td><td>MKS Electronics<br>72, Perumal samy Complex,<br>Arani Road,<br>Otteri,<br>Vellore - 2</td><td>1.15% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள Peak Power Solution, ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
(ந.க.எண். 1262 /2020 /இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.05.2020</td>
<td>
<u>பொருள் எண்.146</u><br>
இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் மற்றும் இணையதளவழி இணைப்புகள்( Net Work) ஆகியவற்றை பொதுநிதியின் கீழ் ரூ.3,00,000/– மதிப்பீட்டில் 2020–2021 ஆம் ஆண்டு பராமரிப்பு பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 08.05.2020அன்று வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>கா.விஜயகுமார்<br>குட்லக் கம்ப்யூட்டர்ஸ்,<br>275/4, அரசு வட்டம், மண்டலவாடி, திருப்பத்தூர்மாவட்டம்</td><td>0.26% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>சி.உமாபதி<br>முகில் கம்ப்யூட்டர்ஸ், சீசன் காம்ப்ளக்ஸ், நியூ டவுன், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.</td><td>1.14% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.146<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள கா.விஜயகுமார், குட்லக் கம்ப்யூட்டர்ஸ், ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.26% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1261 /2020 /இ1)** | |
| 29.05.2020 | **பொருள் எண்.147**<br>இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள மின்மாற்றி – II –ன் II KV AB SWITCH மற்றும் LIGHTNING ARREST ஆகியவை பழுதடைந்துள்ளதால் அவற்றினை புதியதாக மாற்றவும் மின்மாற்றி – II னை இணைக்கும் கேபிள் பழுதடைந்துவிட்டபடியால், புதியதாக 3.50 CORE ALUMINIUM CABLE 300 Sqm 31 மீட்டர் புதியதாக வாங்கி மாற்றவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படிப் பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1405/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.147 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகிறது.** |

<table>
<tr>
<td>29.05.2020</td>
<td>
<u>பொருள் எண்.148</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 28–இல் அமைந்துள்ள இராணிப்பேட்டைப் பகுதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள இரண்டு இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காந்தி நகரில் உள்ள புதிய இரண்டு இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றுவதற்கு மேற்படி தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியில் NON–RETURN VALUES, PIPELINES, ALL VARITIES OF GI AND PVC SPECIALS, புதியதாக வாங்கி பொருத்தவும் அதற்காகும் செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படிப் பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் இந்நகராட்சியின் குடிநீர் விநியோக நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1493/2020/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.148<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.</td>
</tr>
<tr>
<td>29.05.2020</td>
<td>
<u>பொருள் எண்.149</u><br>
இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள மின்மாற்றி –II–ன் 11 KV AB SWITCH, Lightning Arrest மற்றும் 3.50 அலுமீனியம் கேபிள் 300 sq.mm 31 மீட்டர் ஆகியவை குடிநீர் நிதியின் கீழ் ரூ.2,00,000/– மதிப்பீட்டில் புதியதாக வாங்கிப் பொருத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரியதில் 15.05.2020 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி. அருணகிரி, ஒப்பந்ததாரர்,<br>23/87, பஜார் தெரு, இராணிப்பேட்டை</td><td>0.06% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.ராமமூர்த்தி ,ஒப்பந்ததாரர்,<br>பிள்ளையார் கோயில் தெரு, வள்ளலார் நகர், இராணிப்பேட்டை</td><td>1.06% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.149<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1405 /2020 /இ1)** | |
| 29.05.2020 | <u>பொருள் எண்.150</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாப்பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான 1.1 ஹைபோகுளோரைடு, லைசால், ப்ளீச்சிங் பவுடர், நீர்த்திய சுண்ணாம்புத்தூள், பாதுகாப்பு உபகரணங்கள், முககவசம், கையுறை, PPE Kit தெர்மல் ஸ்கேனர், சுவரொட்டி விளம்பரம், துண்டு பிரசுரம், Hand Sanitizer, N95 முககவசம், கிருமிநாசினி, கருவிகள், மற்றும் இது தொடர்பான அனைத்து பொருட்களையும் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள 1939 ஆம் ஆண்டு பொதுசுகாதாரச்சட்டம் பிரிவு I I –ல் VII மற்றும் பிரிவு 62 மற்றும் 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 53 (1) –ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் செலவினம் செய்தமைக்கும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1203 /2020/எச்1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.150 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| 29.05.2020 | **<u>பொருள் எண்.151</u>**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி வரி வசூல் மையம் கட்டடத்தின் பிரதான கதவு, ஜன்னல்கள் மற்றும் குளிர்சாதனப்பெட்டிகள் பழுதடைந்து சரிவர இயங்காமல் பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதாலும், பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ளதாலும், மேற்படி கட்டடத்தை புதுப்பிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 2.00 (இரண்டு இலட்சம் மட்டும்) –த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.2.00 (இரண்டு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1608/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.151 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகிறது.** |
| 29.05.2020 | **<u>பொருள் எண்.152</u>**<br>கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளதால், இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண். 23–ல் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தில் ஏழை எளியோர் மற்றும் பொதுமக்களுக்கும் மூன்று வேளை உணவு வழங்கப்படுவதைத் தொடர்ந்து அம்மா உணவகத்தில் உணவு வழங்கப்படும் போது சமூக இடைவெளியை கடைபிடிப்பதற்கு ஏதுவாக மேற்படி அம்மா உணவக கட்டடத்தில் பராமரிப்பு பணி செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் (மூன்று இலட்சம் மட்டும்)–த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.3.00 இலட்சம் (மூன்று இலட்சத்து மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1589/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.152 மன்றப்பொருள அனுமதி வழங்கப்பட்டது.** |

<table>
<tr><td>29.05.2020</td><td>

<u>பொருள் எண்.153</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 காரை, பர்மா காலனி பகுதியில் கழிவுநீர் வடிகால்வாய் அமைக்கக் கோரி திருமதி.சாவித்ரி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P.No.32878/18–ன் தீர்ப்பின்படி மேற்படி பணியை செய்திட இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 11.03.2020 ஆம் தேதி முன் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27.03.2020 மற்றும் 03.04.2020 ஆம் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால் 17.04.2020 ஆம் தேதி இரண்டாவது முறையாக மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.K. இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர்<br>290/2, விநாயகர் கோயில் தெரு, வ.ள்ளலார் நகர், இராணிப்பேட்டை.</td><td>0.06% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.அமரேந்திரன், ஒப்பந்ததாரர்,<br>எண்.6, மாரியம்மன் கோயில் தெரு,<br>காகிதப்பட்டறை, வேலூர் .</td><td>1.16% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பட்டியலில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.K.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1108 /2020 /இ1)**

</td><td>

**நகர்மன்றத் தீர்மான எண்.153 மன்றப்பொருள அனுமதி வழங்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>29.05.2020</td><td>

<u>பொருள் எண்.154</u>

இந்நகராட்சி வார்டு எண்.11–இல் எல்.எப்.ரோடு பள்ளிக்கூடத் தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடம் பதிமூன்று ஆண்டுகளாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்ற நிலையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததால் பொதுமக்களின் பயன்பாடு

</td><td>

**நகர்மன்றத் தீர்மான எண்.154 மன்றப்பொருள அனுமதி வழங்கப்பட்டது.**

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | குறைந்து வருவதால் மேற்படி சமுதாயக் கூடத்தில் பராமரிப்பு பணிகள் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் தொகைரூ.9.60 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.9.60 இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1475 /2020 /இ1)** | |
| 29.05.2020 | **<u>பொருள் எண்.155</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் தினசரி சேகரிக்கப்படும் 17 மெட்ரிக் டன் குப்பைகளை எருவாக்குவதற்கு இந்நகரில் செயல்படும் (MCC) நுண்ணுயிர் கூடத்திலும் இந்நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள காலியிடத்தில் Windrow மூலம் சேகரிக்கும் குப்பைகள் மூலம் உருவாகும் திடக்கழிவுகளை சலித்து எடுப்பதற்கு ஒரு ஜல்லடை செய்ய மின் மோட்டார்ருடன் கூடிய ஜல்லடை தேவைப்படுகின்றது. இதை வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சம் ( ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி பெற மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.1.50 இலட்சம் இந்நகராட்சிபொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம். | **நகர்மன்றத் தீர்மான எண்.155 மன்றப்பொருள அனுமதி வழங்கப்பட்டது.** |

xxxஒம்./ ச. செல்வபாலாஜி,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி.